# வயோதிகர்களின் நிதி விவகாரங்கள் குறித்த உங்கள் வழிகாட்டி

The Law Society

## உங்கள் எதிர்காலத்தை நிர்வகித்தல்

தன்னுடைய விஷயங்களையும் தன்னுடைய பணத்தையும் சுயமாக நிர்வகித்துக்கொள்ளும் உரிமை வயதுவந்த அனைவருக்கும் உண்டு. இருந்தாலும் சிலசமயங்களில், அதைச் செய்யும் நமது திறன் வயோதிகம் காரணமாக குறைந்துபோகும். நோய்கள், உடற்திறன் பாதிக்கப்படுதல், விபத்து போன்ற பல்வேறு காரணங்களால் அது ஏற்படலாம். அப்படி ஒரு சூழ்நிலையை எதிர்கொள்வதற்காக உங்களை நீங்கள் தயார்செய்துகொள்வதற்கு நிறைய வழிமுறைகள் இருக்கின்றன.

மேற்சொன்ன விஷயம் உங்களுக்கோ உங்களுக்கு நெருக்கமான ஒருவருக்கோ பொருந்துகிறது என்றால், சட்ட ஆலோசனை பெறுவதை நீங்கள் பரிசீலிக்கவேண்டும். உங்களைப் பற்றிய விஷயங்களை ஒழுங்கு செய்து, எதிர்காலம் குறித்த உங்களது விருப்பங்களை நீங்கள் அறிந்துகொள்வதை ஊக்குவித்து சட்டத்தரணியால் உதவமுடியும். உயில் எழுதி வைப்பது தொடங்கி, தேவையானால் நிதி விவகாரங்கள் தொடர்பில் உங்கள் சார்பில் செயல்பட சட்டப்படி ஒருவரை நியமிப்பது வரை பல்வேறு விஷயங்கள் இதில் அடங்கும்.

உங்களது உறவினர் அல்லது பராமரிப்பாளர் மீதான சுமையை இது குறைக்கும். இல்லையென்றால் உங்கள் சார்பாக சிக்கலான விஷயங்களில் முடிவெடுக்க அவர்கள் சிரமப்படுவார்கள்.

இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள போதிய நேரம் இல்லை என்ற நிலையிலோ ஒருவர் ஏற்கனவே உடற்திறன் இழந்துவிட்டாலோ (அதாவது தன்னுடைய நிதி விவகாரங்களை தானாகவே கையாள இயலாது என்றால்) அந்நபரின் உறவினர்களுக்குத்தான் பொதுவாக ஆலோசனைகள் தேவைப்படும். அப்படியான சூழ்நிலையில் பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. அதில் ஒன்று பாதுகாவல் நீதிமன்றத்தை தொடர்புகொள்ளுதல் என்பது. சம்பந்தப்பட்டவரின் நிதி விவகாரங்களை கவனிக்க அந்நீதிமன்றம் ஏற்பாடுகளைச் செய்யும். உங்களைப் பொறுத்த மட்டில் எது சிறந்த வழி என்பதை சட்டத்தரணி கூறுவார்.

## சட்டத்தரணி ஒருவரைக் கண்டறிதல்

உங்களுக்கென சட்டத்தரணி கிடையாது என்றால், www.lawsociety.org.uk/findasolicitor என்ற எமது இணையதளத்தில் உங்கள் வட்டாரத்தில் இருக்கும் சட்டத்தரணிகளைத் தேடவும். மாறாக 0870 606 2555 என்ற தொலைபேசி இலக்கத்தையும் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

## உங்கள் சட்டத்தரணி அறிய வேண்டியவை யாவை

நீங்கள் கட்சிக்காரர் எனும் பொழுது, பின்வரும் விடயங்களை சட்டத்தரணி உங்களிடம் இருந்து தெரிந்துகொள்ள வேண்டிவரும்.

- நீங்கள் உயில் ஒன்றை ஏற்படுத்திவைத்திருக்கிறீர்களா இல்லையா;
- உங்களது நிதி விவகாரங்களைக் கையாள யாரை நீங்கள் தெரிவுசெய்கிறீர்கள்;
- உங்களுடைய சொத்துகள் மற்றும் வருமானம் யாவை;
- உங்களது சொத்துகளும் பொருட்களும் எவ்வாறு கையாளப்பட வேண்டுமென்பதில் உங்களுக்கு இருக்கும் சிறப்பு விருப்பங்கள்; மற்றும்
- உங்களது உடல்நிலை மற்றும் மருத்துவம் பற்றி குறிப்பிட வேண்டிய விடயங்கள் (அப்படியிருந்தால், உங்களது மருத்துவரிடம் கலந்துபேச உங்கள் அனுமதியை சட்டத்தரணி கேட்பார்).

வயோதிகர் ஒருவர் சார்பாக நீங்கள் சட்ட ஆலோசனை கேட்கிறீர்கள் என்றால், சட்டத்தரணிக்கு விஷயம் தெரிவித்து வேண்டிய தகவல்களைப் பெற அந்த முதியவருக்குச் சம்மதமா என்பதை அவரிடம் இருந்து சட்டத்தரணி கேட்டறிவார். விபரங்களைப் பரிசீலிக்கிற சந்தர்ப்பம் சட்டத்தரணிக்கு வாய்த்தவுடன், உங்களுக்கு இருக்கும் வழிவகைகள் பற்றி சட்டத்தரணியால் விளக்க முடியும். அந்த வழிவகைகள் பின்வருமாறு.

## உங்கள் சார்பில் செயலாற்ற 'அட்டார்னி' பொறுப்பில் ஒருவரை நியமித்தல் – சாதாரண வகை

உடற்தி உடற்திறன் இழத்தல் போன்ற ஒரு காரணத்தினால் உங்கள் நிதி விவகாரங்களை நீங்களே நிர்வகிப்பது சிரமம் என்றாகும்போது வேறு ஒருவருக்கு நீங்கள் அந்த அதிகாரத்தை வழங்குவதற்கான சட்ட வழிமுறை இது. நெருங்கிய உறவினர், நண்பர் அல்லது உங்கள் சட்டத்தரணி போன்று நம்பிக்கைக்கு பாத்திரமான ஒருவரை 'அட்டார்னி' பொறுப்பில் நியமிப்பது வழக்கம். அட்டார்னி அதிகாரத்தை ஒருவர் அவராக எடுத்துக்கொள்ள முடியாது. நீங்கள் மனமுவந்து அதனை அவருக்கு வழங்க வேண்டும். அட்டார்னியாக யாரை நியமிப்பது என்பதை அவ்வதிகாரத்தை வழங்குபவரே தீர்மானிப்பார். வேண்டுமான நேரத்தில் அவர் அந்த ஏற்பாட்டை ரத்துசெய்துகொள்ளலாம்.

மற்றவருக்கு அதிகாரம் வழங்கும் ஏற்பாட்டின் விளைவுகள் மற்றும் தாக்கங்கள் பற்றி முழுமையாக நீங்கள் புரிந்துகொள்ளும்போதுதான் அந்த ஏற்பாடு பொருத்தமானதாக இருக்கும். உங்கள் நிதி விவகாரங்களை நிர்வகிக்கும் உள ரீதியான திறனை நீங்கள் இழக்கிறீர்கள் என்றால் மற்றவருக்கு நீங்கள் கொடுத்திருந்த அதிகாரமும் முடிவுக்கு வந்துவிடும்.

## உங்கள் சார்பில் செயலாற்ற 'அட்டார்னி' பொறுப்பில் ஒருவரை நியமித்தல் – நீடித்த வகை

நீடித்த வகையில் அட்டார்னி பொறுப்பில் ஒருவரை நியமிப்பதென்பது சாதாரண வகைக்கும் ஒரு படி மேல். ஏனென்றால் உங்களது நிதி விவகாரங்களை கவனிக்கும் திறனை - தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ, அல்லது நோய்வாய்ப்படுதல், உடற்திறன் இழத்தல் அல்லது விபத்து காரணமாகவோ - நீங்கள் இழந்த பின்னரும், அவற்றை அட்டார்னியானவர் தொடர்ந்து கவனிக்க இந்த ஏற்பாடு உரிமை வழங்கும். நீடித்த வகையில் செயலாற்றும் அதிகாரம் வழங்கும் நியமன ஒப்பந்தங்கள் அதாவது லாஸ்டிங் பவர் ஒஃப் அட்டார்னி தொடர்ந்து செயலாற்றும் வகையிலான அதிகாரம் வழங்கும் எண்டியூரிங் பவர் ஒஃப் அட்டானிகளை வழக்கத்திலிருந்து ஒழித்திருக்கிறது. ஆனாலும் 1 அக்டோபர் 2007க்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட எண்டியூரிங் வகை ஒப்பந்தங்கள் இப்போதும் செல்லுபடி ஆகும். ஆனால் 1 அக்டோபர் 2007 தேதிக்கு பிறகு எண்டியூரிங் பவர் ஒஃப் அட்டார்னிகளை புதிதாக ஏற்படுத்த முடியாது.

நீடித்த வகையில் செயலாற்றும் அதிகார ஒப்பந்தங்கள் செல்லுபடி ஆக வேண்டுமானால், அதனை ஏற்படுத்திய சமயத்தில் அதன் தாக்கங்கள் அனைத்தையும் நீங்கள் புரிந்துகொண்டிருக்க வேண்டும் என்பது அவசியம். அனைத்து விளைவுகளையும் நீங்கள் புரிந்துகொண்டீர்கள், யாரும் உங்களுக்கு இப்படி அதிகாரம் தரச்சொல்லி அழுத்தம் தரவில்லை என்பதில் சான்றிதழ் வழங்கும் ஒருவர் முறையாக கையெழுத்திட வேண்டும். (உங்களை குறைந்தபட்சம் இரண்டு வருடங்களுக்காவது அறிந்த ஒருவராகவோ அல்லது ஒரு நபர் உடற்திறன் இழந்திருக்கிறாரா என்று மதிப்பிடுவதில் சிறப்பு திறன் பெற்றவராகவோ சான்றிதழ் வழங்குபவர் இருத்தல் வேண்டும்.) அட்டார்னியாக நியமிக்கப்படுபவருக்கு குறைந்தது 18 வயது பூர்த்தியாகியிருக்க வேண்டும். ஒரு நபரின் பணம் மற்றும் சொத்துக்கள் குறித்து முடிவெடுப்பதற்காக அட்டார்னியாக நியமிக்கப்படுபவர் தன்னிடம் பணமோ சொத்தோ இல்லாதவராக அறிவிக்கப்பட்டவராக இருக்கக்கூடாது. ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவரை அட்டார்னியாக நியமிக்கலாம்.

அதிகாரம் வழங்கும் ஒப்பந்தத்தை பொது ஆவண பாதுகாவலர் அலுவலகத்தில் பதிவு செய்யாதவரை உங்கள் சார்பில் அட்டார்னியாக நியமிக்கப்பட்டவரால் முடிவுகளை எடுக்க முடியாது. உங்களின் நலன் கருதி செயல்படுவதில் தனக்கிருக்கும் கடப்பாடுகளை அட்டார்னியாக நியமிக்கப்பட்டவர் உணர்ந்துகொண்டாரா என்பதை பொது ஆவண பாதுகாவலர் அலுவலகத்தினர் உறுதிசெய்வார்கள். இவ்வகை அதிகார வழங்கும் ஒப்பந்தங்களைப் பதிவு செய்ய அந்த அலுவலகத்தினர் கட்டணம் வசூலிப்பார்கள்.

**தனிப்பட்ட மற்றும் நலன் விரும்பும் முடிவுகள்.**

உங்களின் தனிப்பட்ட நலன் மற்றும் உங்களுக்கான மருத்துவ சிகிச்சை குறித்து உங்களால் முடிவு எடுக்க முடியாத நிலை எதிர்காலத்தில் உருவாகும்பட்சத்தில் அச்சமயம் உங்கள் சார்பில் முடிவு எடுக்கும் அதிகாரத்தை அட்டார்னிக்கு வழங்கும் நீடித்த வகை செயலாற்று அதிகாரம் வழங்கும் ஒப்பந்தத்தை நீங்கள் தனியாக ஏற்படுத்திக்கொள்ளலாம்.

நீடித்த வகை செயலாற்று அதிகாரம் வழங்கும் ஒப்பந்தத்தை முறைப்படி ஏற்படுத்தப்படுவதையும் பதிவுசெய்யப்படுவதையும் உறுதி செய்வதற்கு சிறந்த வழி ஒரு சட்டத்தரணியை கலந்து ஆலோசிப்பதுதான். அதுதான் உரிமை வழங்குவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதற்கு உகந்தது.

## பாதுகாவல் நீதிமன்றம்

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட முடிவை எடுக்கக்கூடிய உளநிலை இல்லாத நிலையில் ஒருவர் இருக்கிறார். நீடித்த வகை செயலாற்று அதிகாரம் வழங்கும் ஒப்பந்தம் எதனையும் அவர் ஏற்படுத்தியிருக்கவில்லை; முறைப்படி முடிவெடுக்க வேண்டிய அவசியம் உள்ள தருணம் அது என்கிற நிலையில், அவ்விவகாரத்தை பாதுகாவல் நீதிமன்றத்தின் முன்பு கொண்டுசெல்லலாம். ஒன்று, சம்பந்தப்பட்டவர் சார்பாக நீதிமன்றம் முடிவெடுக்கும் அல்லது டெபுடி என்றழைக்கப்படும் ஒருவரை சம்பந்தப்பட்டவர் சார்பாக முடிவெடுப்பதற்காக நீதிமன்றம் நியமிக்கும். ஒருவரின் சொத்து மற்றும் நிதி விவகாரங்களை தொடர்ந்து நிர்வகிக்கும் அடிப்படையில் டெபுடி ஒருவரை நீதிமன்றம் நியமிக்குமானால், அவர் கணக்கு வழக்குகளை எழுதி வரவேண்டும், உத்திரவாத

உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் மற்றும் பொது ஆவண பாதுகாவலர் அலுவலகத்தில் சமூகமளிக்க வேண்டும் என்பதும் வழக்கம். மேற்சொன்ன விஷயங்களைச் செய்ய பாதுகாவல் நீதிமன்றம் ஒரே முறை மட்டும் விண்ணப்பக் கட்டணம் வசூலிக்கும் டெபுடியின் பணிகளை மேற்பார்வையிடும் செலவுகள் தொடர்பாக பொது ஆவண பாதுகாவல் அலுவலகம் வருடாந்திரக் கட்டணம் வசூலிக்கும்.

## உதவித்தொகை பெறுபவர் நியமனம்

உடற்திறன் இழந்த ஒருவருக்கு ஓய்வூதியமோ அல்லது பிற அரசு உதவித் தொகைகளோ கிடைக்கும் என்றால், அவர் சார்பாக அந்த உதவித் தொகைகளை வாங்க, வேலை மற்றும் ஓய்வூதியத் துறை அப்பாய்ண்டீ என்றழைக்கப்படும் ஒருவரை நியமிக்கலாம். சம்பந்தப்பட்டவரின் உறவினராகவோ நண்பராகவோ அல்லது பராமரிப்பு சேவையைச் சேர்ந்தவராகவோ (உள்ளூர் நிர்வாகத்தின் சமூக சேவைகள் துறையைச் சேர்ந்தோர் போன்றவர்களாக) அவர் இருக்கலாம். உதவித் தொகை கேட்பவர் உடற்திறன் இழந்தவர் என்பதற்கான மருத்துவர் சான்றிதழ் போன்ற ஒரு ஆதாரத்தை அவர்கள் காட்ட வேண்டும். இந்த சேவையைப் பெறுவதற்கு கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

## மற்ற நிதி விவகாரங்கள்

வயது முதிர்ந்தோரைப் பாதிக்கக்கூடிய பலவிதமான சட்ட விவகாரங்கள் குறித்து சட்டத்தரணியால் உங்களுக்கு ஆலோசனை வழங்க முடியும். உதாரணத்துக்கு:

- நிதி விடுதலை திட்டங்கள், அதாவது உங்கள் வீடு சம்பந்தமான நிதியில் சிறிதளவை பிரித்து வெளிக்கொணருவது;
- நீண்ட கால பராமரிப்புக்கான செலவினங்களை எதிர்கொள்வதற்கான நிதி ஏற்பாடுகள்;
- உயில் அல்லது உயிரோடு இருக்கும்போதே தானம் வழங்குதல் மூலமாக உங்கள் சொத்துகளைப் பிரித்துக் கொடுக்க திட்டமிடுவது; அல்லது
- பண ரீதியாக துஷ்பிரயோகத்துக்கு ஆளானவராக வயது முதிர்ந்த ஒருவர் இருக்கலாம் என்று நீங்கள் சந்தேகித்தால் செய்ய வேண்டியது போன்றவை.

## செலவுகள்

சட்டத்தரணியைப் பொறுத்து கட்டணம் மாறுபடும். உங்கள் சூழ்நிலை, உங்களுக்கு எந்த அளவுக்கு ஆலோசனையும் உதவிகளும் தேவை என்பனவற்றைப் பொறுத்தும் கட்டணம் மாறூபடும்: எந்த சட்டத்தரணி அலுவலகத்தை பயன்படுத்துவது என்று முடிவுசெய்வதற்கு முன், நீங்கள் எளிதில் அணுகக்கூடியவர்களாக அவர்கள் இருக்கிறார்களா, குறிப்பிட்ட இந்தப் பிரிவில் அவர்களுக்கு எந்த அளவு அனுபவம் இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ளுங்கள். அவர்கள் எவ்வளவு கட்டணம் பெறுவார்கள் என்பது குறித்தும் தெளிவாகப் புரிந்துகொள்ளுங்கள். கட்டணத்தின் அளவை மட்டும் வைத்து ஆளை முடிவுசெய்யாதீர்கள். நீங்கள் எளிதில் அணுகக்கூடிய, நீங்கள் புரிந்துகொள்ளும்படியான ஆலோசனைகளை வழங்கக்கூடியவர்களை நியமிப்பதென்பதும் அதே அளவு முக்கியம்.

## கூடுதல் தகவல்

சட்டத்தரணிகள்  வழங்கக்கூடிய பொதுவான சேவைகள் பற்றிய பிரசுர வரிசையில் ஒன்று இது. இந்த வரிசையிலுள்ள மற்ற பிரசுரங்களின் பட்டியல் கீழே தரப்படுகிறது. உங்களது சட்டத்தரணியிடம் இருந்தும் அல்லது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்சுக்கான சட்ட சங்கத்தை 0870 3333 084 என்ற இலக்கத்தில் அழைத்தும் நீங்கள் இவற்றைப் பெறலாம்.

- உயில் எழுதுவதற்கான உங்கள் வழிகாட்டி
- வீடு வாங்குவதற்கான உங்கள் வழிகாட்டி
- விவாகரத்து பெறுவதற்கான வழிகாட்டி
- வேலையிடப் பிரச்சினைகள் குறித்த உங்கள் வழிகாட்டி
- தொழில் தொடங்குதற்கான உங்கள் வழிகாட்டி
- அடிபட்டதற்கு நஷ்டஈடு வாங்குவதற்கான உங்கள் வழிகாட்டி
- வாழ்க்கைத் துணையுடன் சேர்ந்து குடும்பம் நடத்துவதற்கு தேவையான உதவிகள் பற்றிய வழிகாட்டி
- வீடு வாடகைக்கு விடுவதற்கான உங்கள் வழிகாட்டி
- வீடு வாடகைக்கு எடுப்பதற்கான உங்கள் வழிகாட்டி
- சட்டத்தரணி ஒருவரை நீங்கள் பயன்படுத்துவதற்கான வழிகாட்டி
- ‘ப்ரொபேட்’ எனப்படும் உயிலுக்கான நீதிமன்ற அங்கீகாரம் பெறுவதற்கான உங்கள் வழிகாட்டி
- தஞ்சம் கோருவதற்கான உங்கள் வழிகாட்டி

**பெரிய எழுத்துக்களைக் கொண்டு அச்சடிக்கப்பட்ட வடிவிலும், பார்வையற்றோர் படித்து அறியக்கூடிய பிரெய்லி எழுத்து வடிவிலும், குறுந்தகடு வடிவிலும் இந்த வழிகாட்டி கிடைக்கும். இதில் ஒன்று உங்களுக்கு வேண்டுமென்றால் accessibility@lawsociety.org.uk என்ற மின் –அஞ்சல் முகவரியையோ அல்லது 0870 606 2555 என்ற தொலைபேசி இலக்கத்தையோ தொடர்புகொள்ளவும்.**

**வேறு பல மொழிகளிலும் இந்த வழிகாட்டி கிடைக்கும். www.lawsociety.org.uk என்ற எங்கள் இணைய தளத்திற்குச் சென்று நீங்கள் அவற்றைப் பெறலாம்.**


Lexcel

Look for Lexcel - the mark of excellence





துல்லியமான விபரங்களை வழங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் எடுத்துள்ளோம் என்றாலும், சட்டம் என்பது தொடர்ந்தும் மாறிவருகிறது, ஒவ்வொருத்தருக்கும் அது வெவ்வேறு வகையில் பொருந்துகிறது என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். உங்கள் சூழ்நிலைக்கான குறிப்பிட்ட ஆலோசனைக்கு எதுவும் ஈடாகாது. ஆகவே இந்தப் பிரசுரத்தை மட்டும் நீங்கள் சார்ந்திருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.



Designed by dmlmarketing.co.uk  Version 2, 2007  Your guide to financial matters for the elderly – Tamil